Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# தமிழக கோவில் கட்டுமான வளர்ச்சியும் சிற்பக்கலையும்

44

V.ARUN
Faculty (contract) of Visual Arts sculpture RDCFA
Kalakshetra Foundation, Thiruvanmiyur, Chennai, Tamilnadu, India
Email: arunsculpart@gmail.com

**Abstract**:

Tamilnadu's Significant pride and prestige is its traditional values in the form of Temple and sculptures that have been preserved and the legacy passes on to the next generation. As mankind's thought process evolves in various time Frames trying to overcome nature in all possible ways, nature is always the winner. Tamilnadu's great kings and emperors have built many astonishing temples with profound. Architectures with the help of saints and sthapathies to spread and inculcate Spiritual values in people's life with the moto of peace and happiness. The beautiful and marvelous stone, bronze sculptures and relief panel architected in temples depict the moral bond to lead a blissful and prosperous life. Hence the article focuses on the details of bronze sculpture and arts that have been seen in the temples of Tamilnadu.

**Keywords**: Traditional values, mankind's Sthapathies bronze sculpture, Temples.

**முன்னுரை** :

மனிதன் தோன்றிய வரலாறு பற்றியும் உலகம் தோன்றிய வரலாறு பற்றியும் ஆய்வுலகம் பல்வேறு ஆய்வுகளை நடத்தி இவ்வாறுதான் நடந்திருக்கக் கூடும் என்று அறுதியிட்டு கூறுகின்றனர். அதைப்போல கலையின் ஆரம்பம் குகைமனிதனாக வாழ்ந்த காலம் தொட்டே தொடங்கிவிட்டது. பழம்பெரும் நாகரிகங்கள் அனைத்தும் ஆற்றங்கரை ஒரங்களில் ஏற்பட்ட நாகரிகங்களே. யூபிரிட்டிசு, தைகிரிசு, ஆற்றங்கரைகளிலும் கங்கை, சிந்து, காவிரி, வைகை ஆற்றங் கரைகளிலும் வளர்ந்த நாகரிகங்கே மிகப் பழமையானவை. நாடோடியாக வாழ்ந்த மனிதன் நிலையாக ஓரிடத்தில் வாழத் தொடங்கினான். இங்கெல்லாம் பெரிய நகரங்கள் உருவாயின. உழவுத் தொழிலே நாகரிகத்தின் அடிப்படை. கட்டிடக் கலை, சிற்பக் கலை அதனோடு சேர்ந்து வேறு பல தொழில்களும் செழித்தன. மனிதன் செம்மையுற்றுத் பல கலைகளின் வளர்ச்சிக்கு வழி வகுத்தான்.

**சிற்பக்கலை :**

அழகுக் கலைகளில் கட்டடக் கலையோடு பின்னிப் பிணைந்து வளர்ந்தது சிற்பமாகும். நம் நாட்டுக் கட்டிடவல்லுநர சிற்பியென்றே அழைக்கப்படுவர். அவர்கள் கட்டிடங்களின் குறிப்பாகக் கோயில்களின் தூண்கள், விதானங்கள், சுவர்கள், கோபுரங்கள் அனைத்திலும் அழகிய சிற்பங்களை அமைத்தே கட்டினர். சங்க காலத்தில் களிமண்ணால் பொம்மைகள் செய்தோர் மண்ணீட்டாளர் எனப்பட்டனர். வீடுகளில் சுதையுருவங்கள் அழகூட்டின.

வழுவறு மரனும் மண்ணும் கல்லும்

எழுதிய பாவையும்
மண்ணினும் கல்லினும் மரத்தினும் சுவரினும்
கண்ணிய தெய்வம் காட்டுநர் வகுக்க

என்கிறது மணிமேகலை. புகாரிலே இந்திர விழாவின் பொழுது மக்கள் அங்கேயிருந்த சுதையுருவங்களைக் கண்டு மகிழ்ந்தனராம். நடுகல்லில் இறந்தவர் உருவம் பொறிக்கப்பட்டது. கோவில்களில் சுதையாலான உருவங்கள் வணங்கப்பட்டன. மரச் சிற்பங்களும் இருந்தன. வீட்டு நிலைகளில் பூவேலைப்பாடுகள் இருந்தன. மேல் விட்டத்தில் திருமகள் உருவம் இருபுறமும் மலர் ஏந்திய யானைகளோடு அமைக்கப்பட்டது. இது இன்றளவிலும் வீடுகளில் காணப்படுகின்றது. இதனால் சங்க காலத்துச் சிற்பக் கலையைப் பற்றி அறியலாம்.

**பல்லவர் காலச் சிற்பக் கலை:**

சங்ககாலத்தில் கட்டப்பட்ட யாவும் மரம், செங்கல், சுண்ணாம்பு ஆகியவற்றாலானவை. அவை காலம் கடந்து நிலைப்பு தன்மை அற்றவையாக அழிந்தன. பல்லவர்களே முதன் முதலாக மலைகளைக் குடைந்தும், பாறைகளைச் செதுக்கியும் கற்களை அடுக்கியும் கோயில்களைக் கட்டி புகழ்பெற்றவர்கள். மகேந்திரவர்மன் I சிறந்த கலைஞன். அவனது விருதுப் பெயர்களில் சித்திரகாரப்புலி என்பது குறிப்பிடத்தக்கது. வல்லம், மாமண்டூர், மகேந்திரவாடி, மண்டகப்பட்டு, பல்லாவரம், திருச்சி தளவானூர் முதலிய பல இடங்களில் குகைக்கோயில்களை அமைத்து இருக்கிறான். மண்டகப்பட்டுக் குகைக்கோயிலில் செங்கல், சுண்ணாம்பு, மரம், உலோகம் முதலியவை இல்லாமலேயே பிரம்மா, ஈசன், திருமாலுக்கும் மரமின்றி சுதையின்றி உலோகமின்றி செங்கலின்றி தோற்றுவித்தேன் எனக் கூறுகிறான்.

**மகாபலிபுரம்** :

மகாபலிபுரம் பல்லவரின் சிற்பக் கலைக்கூடமாகவே திகழ்கின்றது. மகிஷாசுரமர்த்தினியின் உருவம் காணத்தக்கது. கண்ணன் கோவர்த்தன மலையைத் தாங்கி நிற்க பசுக்கள் அமைதியாக நிற்கின்றன ; கறவை மாட்டுச் சிற்பம் காணத்தக்கது. பகீரதன்தவம் பற்றிய சிற்பமும் பூனை தவம் செய்யும் காட்சியும் காணத்தக்கவை எலிகள் தவம் பூண்ட பூனையின் முன் அச்சமின்றி அமர்ந்துள்ளன. திருமால் பள்ளி கொள்ளும் காட்சி மகிஷாசுரமண்டபத்தை அழகு செய்கிறது. வராக மண்டபத்தில் வராக அவதாரம், வாமன அவதாரம், கஜலட்சுமி துர்க்கை உருவங்கள் வியத்தகு அழகுடையனவாக காட்சி அளிக்கின்றது.

**திருச்சி மலைக்கோயில்:**

பல்லவர் அமைத்த கோயில்களின் தூண்களும் சுவர்களும் போதிகைகளும், விதானங்களும் கண்கவரும் சிற்பங்களைக் கொண்டு திகழ்கின்றன. திருச்சி மலைக்கோயிலில் சிவபெருமானது உருவம் வியந்து பார்க்கும் வகையில் அமைந்துள்ளது. சிவபெருமான் தலையிலிருந்து விழும் கங்கை நீரை வலது கையால் தாங்கி நிற்கிறார். பாம்பினைப் பூணூலாக அணிந்துள்ளார். மற்றொருகையால் அதன் தலையைப் பிடித்துள்ளார். மற்றொரு கையை இடுப்பில் வைத்துள்ளார். வலக்காலின் பக்கத்தில் முயலகன் சிலையுள்ளது. அடியார் நால்வர் சிவனை வழிபடுகின்றனர். மேலேயாழோர் இருவர்

உருவமும் சிறிய மனிதன் ஒருவன் உருவமும் உள்ளன.

**சோழர் காலம்**

பல்லாண்டு காலம் புகழ் குன்றிக் கிடந்த சோழ ராஜ்யத்தை மீண்டும் நிறுவி அதனை உயர் நிலைக்குக் கொண்டுவர அடிகோலியவன் விசயாலய சோழனே என்பது வரலாற்று ஆராய்ச்சியாளர் எல்லோரும் கருத்து வேறுபாடின்றி ஒப்புக் கொள்ளும் செய்தியாகும். அதிலிருந்து தமிழகத்தின் பெரும் பகுதியை சோழர்கள் ஆண்டனர். சோழ இராச்சியத்தின் வளர்ச்சிக்கு பெருமைக்கு முதற்காரணமாக இருந்தது மாமன்னன் முதல் இராசராசசோழன் என்று கூறலாம். இவன் இரண்டாம் பராந்தக சோழன் அவன் பட்டத்தரசியாகிய வானவன் மாதேவியின் புதல்வன் ஆவன்.

**தஞ்சை பெரிய கோவில்**

இராசராசன் தமிழகத்தை ஆண்ட ஒப்பற்ற பெரும் மன்னன். இவனது கலை உணர்வையும், பெருமையையும், புகழையும், ஆற்றலையும், பக்திபெருக்கையும் எடுத்துக்காட்டும் வகையில் அவன் எழுப்பியதுதான் தஞ்சை பெரியகோவில். (பாண்டிய குலாசனி வளநாட்டு தஞ்சாவூர்க் கூற்றத்துத் தஞ்சாவூர் நாம் எடுபித்த திருக்கற்றளி இராஜராஜேச்வரம்) கல்வெட்டுப்பகுதியினால் நாம் அறியமுடிகிறது. இதன் மூலம் இராசராசன் கோயில் எடுப்பித்த இடமும் அக்கோயிலின் பெயரும் அஃது அமைந்துள்ள பகுதியும் வளநாடும் நாம் அரியமுடிகின்றது.

**தேவியர் எடுத்த கோவில்கள்:**

அறிவில் சிறந்தவர்களாகவும் அரசை வழி நடத்துபவர்களாகவும் கலைகளில் நாட்டமுடையவர்களாகவும் வீரத்தின் விலை நிலமாகவும் சங்க கால மகளிர் திகழ்ந்துள்ளனர். மன்னனோடு சிம்மாசனத்தில் அமர்ந்திருந்த அரசமாதேவியர் பலரும் ஒப்பற்ற கோயில்களை எழுப்பியுள்ளனர். அவர்களின் செம்பியன் மாதேவியும் குந்தவை பிராட்டியும் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.

**செம்பியன் மாதேவி:**

பராந்தக சோழனின் இரண்டாம் புதல்வனான கண்டராதித்த சோழனின் பட்டத்து அரசியாக விளங்கியவர் செம்பியன் மாதேவி. சேர மன்னர்களுள் ஒரு கிளையான மழுவர் பெருங்குடியில் பிறந்தவர். கண்டராதித்தனுக்குப் பின் அவரது தம்பியாகிய அரிஞ்சயனும், இரண்டாம் பராந்தகன் என்னும் சுந்தரச் சோழனும் அரியாசனத்தில் இருந்து ஆட்சி புரிந்ததைக் கண்டவர். தன் அருமை மகன் மதுராந்தகன் என்னும் உத்தமசோழனும், சுந்தர சோழன் மகன் அருள்மொழிவர்மன் என்னும் ராஜராஜனும் ஆட்சி புரியும்போது உடன் இருந்தவர். ஆகவே எண்பது ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்த செம்பியன்மாதேவி சிறந்த சிவபக்தையாகவே வாழ்ந்திருக்கிறார். கலைகளில் ஈடுபாடு உடையவராக இருந்தார். செங்கல்லால் கட்டிய பழைய கோயில்களையெல்லாம் கற்றளிகளாக மாற்றி நல்ல சிவத்தொண்டு செய்தவர். கயிலாயநாதர் கோயிலை கட்டியிருக்கிறார். அந்த நன்றி காரணமாகவே இந்த ஊரையே செம்பியன்மாதேவி என்று அழைத்திருக்கிறார்கள் மக்கள். இதற்கு முன் அந்த ஊரின் பெயர் என்னவோ தெரியவில்லை. கயிலாய நாதர் கோயில் செம்பியன்மாதேவியின் சிற்பக்கலை ஈடுபாட்டிற்கும் கலைப் பாணிக்கும் சான்றாகத் திகழ்கிறது.

குந்தவை பிராட்டியார் :

இந்தக் கோவில் திண்டிவனத்திற்கு அருகே தாதாபுரம் என்னும் ஊரில் அமைந்துள்ளது. ராஜராஜனின் மூத்த சகோதரி குந்தவை பிராட்டியார் எடுப்பித்த சிவாலயம் என்று தொல்லியல் ஆய்வு மூலம் கண்டறிப்பட்ட கல்வெட்டுகள் வாயிலாக அறியமுடிகின்றது. இக்கோவில் மற்றும் தஞ்சை பெரிய கோவில் இரண்டும் சம காலத்தைச் சார்ந்தவை என வரலாற்று அறிஞர்கள் கருதுகின்றனர். தொல்லியல் துறையால் கண்டறியப்பட்ட கல்வெட்டுகள் மூலம் இரண்டாம் ராஜராஜசோழன், முதலாம் ராஜராஜன், முதலாம் ராஜேந்திரன், இரண்டாம் ராஜேந்திரன் ஆகியோர் இந்தக் கோவிலுடன் வைத்திருந்த தொடர்பு பற்றி பதினான்கு கல் வெட்டுகள் தகவல் தருகின்றன.

கோவிலின் பலிபீடம் நந்தி மண்டபம், முக மண்டபம், மகா மண்டபம், அர்த்த மண்டபம் என அனைத்தும் கருங்கற்களை கொண்டு கற்றளியாக அமைக்கப்பட்டுள்ளது. இந்த மாணிக்க ஈஸ்வரர் திருக்கோவில் குந்தவை நாச்சியாரின் சிற்பக்கலை ஈடுபாட்டிற்கும் கலைப் பாணிக்கும் சான்றாகத் திகழ்கிறது.

**செப்புத்திருமேனிகள்**

சோழர்காலத்திற்கு முன்பிருந்தே தமிழகத்தில் உலோக சிற்பம் செய்யும் முறையிருந்தாலும் சோழர்காலத்தில் தான் இந்த உலோக சிற்பகலை சிறப்பும், செழுமையும் அடைந்தது. தமிழ்நாட்டு கோவில்களிலும் அருங்காட்சியகங்களிலும் வைக்கப்பட்டுள்ள செப்புத் திருமேனிகள் எழில்மிகு கலை படைப்புகளாக விலை மதிப்பில்லாச் செல்வங்களாக திகழ்கின்றன. இன்றளவிலும் தமிழகத்து கோவில்களில் திருவிழாக்காலங்களில் தேர்களிலும் பல்லக்குகளிலும் வைத்து வீதியுலா கொண்டு வந்து மக்கள் வழிபட்டு மகிழ்ந்து கொண்டாடுகின்றனர். AK Coomaraswamy, C.Sivaramamurhi, R.Narayana Swamy போன்றோர் அரும்பாடுபட்டு உலோக சிற்பகலையின் வரலாற்றையும் முக்கியத்துவத்தையும் இவ்உலகிற்கு எடுத்துரைத்திருக்கின்றனர். (பொதுவாக மேல்நாட்டு அருங்காட்சியகங்களும், நமது அருங்காட்சியகங்களுக்கும் உள்ள அடிப்படையான வேற்றுமை ஒன்று உண்டு. மேலை நாட்டு அருங்காட்சியகங்களில் உள்ள பல காட்சிப் பொருள்கள் இன்று அவர்களது வாழ்க்கையில் காணாமல் போய்விட்ட ஒன்றின் பிரதிநிதியாக இருந்து, இறந்த காலத்தைச் சுட்டி நிற்கின்றன. ஆனால் சென்னையின் அருங்காட்சியகம் இதற்கு நேர்மாறானதாகும். இன்றைக்கும் உயிர்த்துடிப்புடன் வாழ்ந்துவரும் ஒரு பண்பாட்டின் பிரதிநிதிகள். எடுத்துக்காட்டாக, சென்னை அருங்காட்சியகத்திலுள்ள செப்புதிருமேனிகளின் அரங்கை எடுத்துக் கொள்ளுவோம். (தேடலின் குரல் பக்கம் : 26)

**ஓவியம் :**

தமிழக கலை வளர்ச்சியில் கோவில் கட்டுமானம், கட்டிடக் கலையில் மட்டும் சிறந்து விளங்கியது என்று எண்ணிவிடக் கூடாது. கவின் கலை ஆகிய ஓவியம் மற்றும் சிற்பக்கலையிலும் சங்ககாலம் தொட்டு தமிழகம் சிறந்து விளங்கியது. தமிழ் நாட்டிலுள்ள மிகப் பழமையான ஓவியம் சித்தன்ன வாசல் ஓவியமாகும். 1400 ஆண்டுகளாக வண்ணம் அழியாமல் நிலைத்துள்ளன. நடனமாதர் ஓவியங்கள் கண்ணைக்கவரும் அழகுடையன. முன்மண்டலத் தூண்கள் இரண்டிலுள்ள இரு நடனப்

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

பெண் ஓவியங்கள், வருவோரை இன்முகத்துடன் வரவேற்கின்றனர். வலத்தூணில் காணப்படும் நடிகையின் தலை வேலைப்பாடு கொண்டது. தலையில் பல அணிகளும, பூங்கொத்துகளும், தாமரை இதழ்களும் மொட்டுகளும் இலைகளும் அழகு செய்கின்றது. காதில் தோடுகளும், கழுத்தாணியும் அழகுமிக்கது. வலக்கையின் சுண்டுவிரலிலும் கட்டை விரலிலும் மோதிரங்கள் உள்ளன. மேலாடைகளிரண்டில் ஒன்று மேலாக இடையில் கட்டப்பட்டுள்ளது. மற்றொன்று மிக்க வனப்புடன் தோளைச் சுற்றிப் பின்னே விடப்பட்டுள்ளது. ஆடையின் சுருக்கம் முதலானவை இயற்கையாகவுள்ளன. இடத்தூணிலுள்ள பெண்ணுருவம் முன்னதைவிட அழகாகவுள்ளது. வலப்புறத் தூணின் உட்புறத்தில் ஓர் அரசன் தலையும் அவன் மனைவியின் தலையும் வரையப்பட்டுள்ளன. காதுகளில் குண்டலங்கள் தொங்குகின்றன. தலையில் மணிமகுடம் காணப்படுகிறது. அரசியின் உருவமும் மிக்க அழகுடையதாகும். கூரையில் சமண முனிவர்கள் தாமரைக் குளத்தில் மலர்ப்பறிக்கும் காட்சி பொலிவுடன் வரையப்பட்டுள்ளது. குளத்தில் மீனும், அன்னங்களும், யானையும், எருமையும் காணப்படுகின்றது. இடக்கையில் பூக்கூடை கொண்டு வலக்கையால் மலர் பறிக்கின்றனர் முனிவர். உள்ளறையின் மேற்கூரையிலும் அழகிய வண்ணக் கோலத்தைக் காணலாம்.

**நிறைவுரை:**

சிற்பக்கலை என்பது சிறந்த கட்புலக்கலை (Visible art)) பழங்காலத்தில் மண், மரம், செங்கல், கருங்கல், உலோகம், தந்தம், அரக்கு முதலியவற்றைக் கொண்டு பலநூறு வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த நம் முன்னோர்கள் உருவாக்கிய கலை படைப்புகளை பாதுகாத்தும் வியந்து பார்த்தும் மகிழ்கிறோம். கால ஒட்டத்தில் மாறிவரும் நவீன காலத்திற்கு ஏற்ப பண்பாட்டுக் கூறுகளில் இருந்து வழுவாமலும் சிற்பக்கலை வளர்த்து வருகின்றோம். இன்னும் பல நூறு ஆண்டுகள் கடந்து நிற்கும் ஆற்றலை இது இயற்கையாகவே பெற்றுள்ளது.

துணை நுற்பட்டியல்:

1. Job Thomas, Chola Bronzes, published by Cre-A : 2018

2. முனைவர் கி.கந்தன், தமிழகச் சிற்பக்கலை வரலாறு, தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர் 2017

3. இந்திரன், தேடலின் குரல்கள், வெளியீடு தமிழ்நாடு ஓவிய நுண்கலைக்குழு அருங்காட்சியக வளாகம் 2000

4. வை.கணபதி ஸ்தபதி சிற்பச் செந்நூல் தொழில் நுட்பக் கல்வி இயக்கம் முதல் வெளியீடு 1978.

5. தி.வை.சதாசிவ பண்டாரத்தார், பிற்கால சோழர் வரலாறு அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1974

6. முனைவர் குடவாயில் பாலசுப்ரமணியன், சோழமண்டலத்து வரலாற்று நாயகர்களின் சிற்பங்களும் ஒவியங்களும், தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர் 1987.

7. முனைவர் பாக்யமேரி, ஆயகலைகள், பாவை பப்ளிக்கேன்ஸ் 2007

8. கல்வெட்டு ஓர் அறிமுகம். தமிழ்நாடு அரசு தொல்பொருள் துறை வெளியீடு

9. முனைவர் ரா.நிரஞ்சனாதேவி, கரிகால் சோழன் கல்லணையைக் கட்டியவனின் கம்பீர வரலாறு, விகடன் பிரசுரம் ‡ 2012